வழக்கு மன்றத்திலேகூட வழக்குகள் நடைபெற்று வருகின்றன. அரசாங்கம் அதைக்குறித்து இதுவரை எந்தவித முடிவும் எடுக்கவில்லை.

Milo supplied in Sathuvachari area

*5. Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether the milo supplied to family card holders in November 1968, in the Sathuvachari area, Vellore has been found, mixed with plastic beads of grain size?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பங்கீட்டு அட்டை வைத்துள்ளவர்களுக்கு விற்பனை செய்வதற்காக நியாயவிலைக் கடை வணிகர், திரு. சிதம்பரம் 29—10—1968 காலை மைலோ மூட்டை ஒன்றைப் பிரித்தார். அதில் தானிய அளவுள்ள பிளாஸ்டிக் மணிகள் இருப்பதைக் கண்டார். 30—10—1968 அன்று மறுபடியும் இன்னுமொரு மைலோ மூட்டையைப் பிரித்தபொழுது, அதிலும் பிளாஸ்டிக் மணிகளைக் கண்டார். மீதியுள்ள மூட்டைகளும் உடனடியாகச் சோதனை செய்யப்பட்டன. ஆனால், பிளாஸ்டிக் மணிகள் எவையும் அவற்றில் காணப்படவில்லை. மற்றக் கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மைலோ மூட்டைகளிலும் பிளாஸ்டிக் மணிகள் இருக்கின்றனவா என்று பார்ப்பதற்காக அவையும் உடனே பரிசோதிக்கப்பட்டன. அந்த மூட்டைகளில் பிளாஸ்டிக் மணிகள் காணப்படவில்லை. இவற்றை அனுப்பிய இடத்தில் இந்தக் கலப்படம் தற்செயலாய் ஏற்பட்டிருக்கக் கூடும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அவற்றிலே பிளாஸ்டிக் மணிகள் இருந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கடைக்காரர்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? உணவுப் பிரச்சினை ஜீவாதாரமான பிரச்சினை. ஆகவே, உணவுப் பொருளில் கலப்படம் செய்பவர்களைத் தண்டிக்க இன்னும் கடுமையான முறைகளைக் கையாள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் அளித்த விடையிலே, "இவற்றை அனுப்பிய இடத்தில் இந்தக் கலப்படம் தற்செயலாக ஏற்பட்டு இருக்கலாம்" என்று சொன்னேன்.

திரு. சா. மெய்யப்பன்: பிளாஸ்டிக் மணிகளின் உற்பத்திச் செலவு தானிய உற்பத்திச் செலவைவிட அதிகமாக இருக்குமாகையால் அது கலப்படச் சட்டத்தின்கீழ் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அங்கத்தினர் சொல்லுகிறபடி பிளாஸ்டிக் மணிகளைத் தயார் செய்கிற செலவு அதிகமாக இருக்கிற காரணத்தால், இது தற்செயலாக ஏற்பட்டிருக்கும் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: இப்படி பிளாஸ்டிக் மணிகள் என்று மட்டுமல்லாமல், கல், மண் போன்றவற்றைக் கலப்படம் செய்கிறார்கள். கலப்படம் இல்லாத வஸ்துவே இல்லை என்ற நிலை

1969 ஆகஸ்ட் 16]

இருக்கிறது. ஆகவே, கலப்படம் செய்வது உற்பத்தி செய்யக் கூடிய இடத்தில் இருந்தாலும்சரி, அல்லது விற்கக் கூடிய இடத்தில் இருந்தாலும்சரி, கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் சர்க்கார் சட்டத்தைத் தகுந்த முறையில் திருத்த முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கலப்படச் சட்டத்தைப் பொறுத்தவரை சுகாதார அமைச்சருக்குக் கேள்வி போட வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : பிளாஸ்டிக் மணிகள் அகஸ்மாத்தாகக் கலந்து விட்டிருக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில மாதங்களுக்கு முன்னால் பழனியில் இதே போன்ற புகார் வந்து அதைப்பற்றி அமைச்சருக்கு எழுதியதற்கு அதன்மீது நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்கள். ஆகவே, அதே போன்று இப்போது நடந்திருப்பதைப் பார்க்கும்போது இது தற்செயலாக நடந்தது அல்ல, வேண்டுமென்றே செய்யப் பட்டிருக்கிறது என்பதற்குத்தான் ஆதாரமாக இருக்கிறது. ஆகவே, இந்த மாதிரிக் கலப்படம் எந்த மட்டத்தில் நடை பெறுகிறது என்பதைக் கண்டு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பழனி சம்பவம்பற்றி என்னிடம் தகவல் இல்லை. தகவல் தெரிவித்தால் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்க முடியும். பிளாஸ்டிக் மணிகளைத் தயாரிப்பதற்காகும் செலவு தானிய மணிகள் உற்பத்திக்காகும் செலவைவிட அதிகமாகும் என்ற காரணத்தால் அரசாங்கம் இது தற்செயலாக நடந்ததாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறது.

விசைத்தறிகள்

*6 வினா.—**திரு. என். சங்கரய்யா** : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தற்பொழுது தமிழ்நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் விசைத் தறிகள் (power-looms) மாவட்ட ரீதியாக எத்தனை ?

(இ) மேற்கொண்டு விசைத் தறிகள் புகுத்தப்படுவதைத் தடுப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாட்டில் தற்பொழுது 20,645 அனுமதிக்கப்பட்ட விசைத்தறிகள் உள்ளன. இவற்றில் 18,742 விசைத்தறிகளுக்கு மாவட்ட ரீதியாக உள்ள விவரம் பின்வருமாறு: 1956-ம் ஆண்டிற்குமுன் அங்கீகரிக்கப்பட்ட மீதியுள்ள 1,903 விசைத்தறிகளுக்கு மாவட்ட ரீதியாக உள்ள விவரம்பற்றித் தகவல் இல்லை.